1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சட்டமன்றத்தின் மொத்தத் தோற்றத்தைக் காட்டுகிற நேரத்தில் இந்த அவை முழுவதும் தெரிய வேண்டுமென்ற அவசியத்தில் எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல் ஆளுநர் உரை என்று சொன்னால் ஆளுநர் படம் முக்கியமாகத் தெரிய வேண்டும். எதைச் சொல்ல வேண்டும், எதை விளக்க வேண்டுமென்று கருதுகிறோமோ அதை விளக்கியாக வேண்டும். ஆகவே ஆளுநர் உரையின்போது மற்றவர்களை எப்படிக் காட்டவேண்டுமோ அந்த அளவுக்கு படம் எடுக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: சமீபத்தில் இந்திய அரசின் செய்திப்படத் துறை வெளியிட்ட இரண்டு படங்களை நான் பார்த்தேன். ஓ. என். ஜி. சி. (ஆயில் அண்ட் நேச்சுரல் கேஸ் கமிஷன் சம்பந்தமாக) ஆராய்ச்சி பற்றிய படத்தையும் அதே போல் கவிஞர் இக்பால் அவர்களின் வரலாற்றுப் படத்தையும் கலரில் காட்டினார்கள். அது பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருந்தது. தமிழக அரசும் அதைப்போன்று கலரிலே செய்திப் படங்களைக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இப்போது கருப்பு வெள்ளை படத்தைப் பார்ப்பதற்கே மக்கள் பின்வாங்குகிற சூழ்நிலை உருவாகிக்கொண்டு இருக்கிறது. ஆகவே சில விளம்பரப் படங்கள் எல்லாம்கூட மிக அழகாகவும் கவர்ச்சிகரமான முறையிலேயும் தொழில் நுட்பங்கள் முன்னேற்றம் அடைந்திருக்கின்ற வகையிலேயும் இன்றைக்கு வண்ணத்திலே எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் மக்கள் தெரிந்துகொள்ளக்கூடிய செய்திப்படங்கள் கவர்ச்சிகரமான முறையிலேயும் வண்ணத்திலேயும் எடுக்கப் படுவதுதான் நியாயம். ஆனால் அதற்காகும் செலவைப் பார்த்தால் அதிகமாக இருக்கிறது. மிக முக்கியமான மக்களுக்குப் பயன்படுகின்ற சில நிகழ்ச்சிகளையாவது கவர்ச்சி கரமாக வண்ணப் படத்திலே எடுக்க முடியுமா என்பதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மயில்களைப் பாதுகாக்கும் திட்டம்.

* வினா எண் 187 திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தேசிய பறவையான மயிலைப் பாதுகாக்கவும் இனப் பெருக்கம் செய்யவும் என்னென்ன திட்டங்கள் [illegible]க்கப் பட்டிருக்கின்றன?

[1982 பிப்ரவரி 16

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாது காக்கப்படவேண்டிய விலங்குகளுள் மயில்களும் சேர்க்கப்பட்டு உள்ளதால் இதனை யாரும் வேட்டையாடி பிடிக்க முடியாது. இதன் இனத்தைப் பெருக்குவதற்கும், இவைகளை நல்ல முறையில் பராமரிக்கவும், மரங்கள் வளர்த்தல், செக்டேம் அமைத்தல் போன்ற அபிவிருத்தி பணிகளை அரசு செய்து வருகிறது. விராலிமலையில் இப்பறவைகள் அதிகம் காணப் படுவதால் இதைப் பாதுகாக்க தனி அலுவலர் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வேடந்தாங்கல், விராலிமலை சரணாலயங்களில் இத்தகைய பறவைகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே மயில் இனத்தைப் பெருக்குவதற்காக தனி கவனம் செலுத்தி இன விருத்தி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மயில்களைப் பொறுத்தவரையில் தனியாக இன விருத்தி செய்வதற்கான திட்டம் இப்போது எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அது இயற்கையாகவே அபிவிருத்தி அடைந்து வருகிறது. சுதந்திரமாகத் திரிகின்ற பறவையாக அது இருந்து கொண்டிருக்கிறது. ஒரு வேளை அது குறைந்து அரிதாகி விடுகின்ற நிலை ஏற்படுமானால் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் ராட்சஸ மயில்கள் உள்ளனவா? சமீபத்திலே சிம்லாவில் ஒரு ராட்சஸ மயில் கமலஹாசனைத் தாக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக பத்திரிகைகளிலே செய்தி வந்தது. ராட்சஸ மயிலுக்கும் தேசியப் பறவை மயிலுக்கும் இருக்கிற வேறுபாடு என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, மயில் தேசியப் பறவை என்பது எந்தத் தகுதியின் அடிப்படையிலே கருதப்படுகிறது, அழகாக இருக்கின்ற காரணத்தினாலேயா அல்லது எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதாலா? எண்ணிக்கை யிலே அதிகமாக இருக்கிற காரணத்தினால் என்றால் காகம் தான் இருக்கிறது என்று கருதுகிறேன். இதைப்பற்றிய தகவலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தேசியப் பறவை என்று தேர்ந்தெடுத்தது மத்திய அரசு. ஆனால் எதனாலே தேர்ந்தெடுக்கப்பட்டது என்ற ஆராய்ச்சி தேவையில்லை. மயிலைப் பார்த்து மயங்காதவர்கள் உலகத்திலேயே யாரும்

இருக்கமுடியாது. அப்படிப்பட்ட அற்புதமான அழகையுடைய மயில் தேசியப் பறவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதைப் பற்றி தெரிந்துகொள்ளக்கூடிய விவரங்கள் ரகசியங்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

தமிழ்நாட்டில் சணல் சாகுபடி.

* வினா எண். 188 திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சணல் சாகுபடியைப் பற்றி ஆராய்ச்சி ஏதும் நடத்தப்பட்டனவா?

(ஆ) இது குறித்து விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் தென்னைப் பயிரிடுவதை மேம்படுத்தும் திட்டம்

*வினா எண் 189 திரு. மெ. ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாநிலத்தில் தென்னை வளர்ப்பு திட்டத்தின் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது?

(ஆ) இந்த திட்டத்தின் மூலம் விவசாயிகளை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பி பார்வையிட அரசு முன்வருமா

(இ) சிங்கப்பூர், இலங்கையிலுள்ள ரகங்களை தமிழ் நாட்டில் பயிர் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) அடுத்த ஐந்து ஆண்டுகளில் 1985–86 முடிய கீழ்க்கண்டவாறு தென்னை பயிரிடும் பரப்பளவையும் தேங்காய் உற்பத்தியையும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது:—

(உற்பத்தி : கோடி தேங்காய்)

1981-82 உற்பத்தி.	1982-83 உற்பத்தி.	1983-84 உற்பத்தி.
137.30	133	141.70

1984-85 உற்பத்தி	1985-86 உற்பத்தி
153.40	i69.30

(ஆ) (இ) திட்டம் ஏதுமில்லை.

* 123ஆம் பக்கத்தில் இணைப்பு-I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.